

My Redeemer
LIVES
RESURRECTION SUNDAY
Celebrate the Savior
En Nesar Ennudayavar Church
No.1, Periyar Street, Nehru Nagar,
Check Post, Velachery, Chennai-42.
Pas. Kingsly Paul - 9841661002
EN NESAR ENNUDAYAVAR CHURCH

1. கொண்டாடுவோம் கொண்டாடுவோம் - F
2. இயேசுவே ஆண்டவர் - F
3. உந்தன் நாமம் உயர்த்துவேன் - G
4. மாட்சிமை தொழுவோம் அவர் மாட்சிமை - G
5. ஒப்பிட முடியாத தெய்வமே - F
6. உயிரோடு எழுந்தவரே - A
7. கீதம் கீதம் ஜெய ஜெய கீதம் - F
8. எனக்காய் ஜீவன் விட்டவரே - F
9. இயேசுவே வழி சத்தியம் ஜீவன் - C
10. உயிரோடு எழுந்த இயேசுவே நான் வாழுவேன் - Cm
11. உயிர்தெழுந்த நம் இயேசு மரனத்தை - F
12. அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர் - Gm
13. கூடுமே எல்லாம் கூடுமே - D
14. சர்வ வல்லவர் என் சொந்தமானார - F
15. உயிரோடு எழுந்தவர் நம் தேவனே - Gm
16. நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை- G
17. இரட்சண்யம் மகிமை துதிகனம் - Fm
18. மரணமே உன் கூர் எங்கே? - Dm
19. வழி சொன்னவர் வழியுமானவர் - G
20. உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா ஜெயித்தெழுந்தாரே - G
21. பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே - D
22. சப்தமாய் பாடி சத்துருவை - F
23. நீர் என்னோடு இருக்கும்போது - Fm
24. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே -C
25. நான் ஆராதிக்கும் இயேசு என்றும் ஜீவிக்கிறாரே - F
26. யூத ராஜ சிங்கம் உயிர்தெழுந்தார் -C
27. யூதாவின் இராஜசிங்கம் நீரே - E
28. அனைத்தையும் செய்து முடிக்கும் - F

# 1. கொண்டாடுவோம் கொண்டாடுவோம்

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுவோம் - 2
வல்ல பெரும் காரியம் செய்திட்டார்
கர்த்தர் பெரும் காரியம் செய்திட்டார்
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுவோம்

**CELEBRATE (3)**
**THE VICTORY OF THE LORD**
**HE HAS DONE MIGHTY THINGS YET AGAIN**
**CELEBRATE, THE VICTORY OF THE LORD**

## 2. இயேசுவே ஆண்டவர்

**இயேசுவே ஆண்டவர் - 2**
**மணரத்தினின்று உயிர்த்தெழுந்தார்**
**கால்கள் யாவும் முடங்கும்**
**நாவு யாவும் போற்றிடும்**
**அந்த இயேசுவே ஆண்டவர்**

**He Is Lord – 2**
**He Has Risen From The Dead And He Is Lord**
**Every Knee Shall Bow**
**Every Tongue Confess**
**That Jesus Christ Is Lord.**

## 3. உந்தன் நாமம் உயர்த்துவேன்

உந்தன் நாமம் உயர்த்துவேன்
துதிகள் பாடி மகிழ்ந்திடுவேனே
எந்தன் வாழ்வில் நிறைந்தவர் நீரே
மீட்க வந்தீர் மகிழ்ந்திடுவேனே

பாதை காட்டிடவே பூவில் வந்தீரே
சிலுவை சுமந்தவரை நாடி வந்தனே
சாவை வென்றவரே உயிர்த்தெழுந்தவரே
உந்தன் நாமம் உயர்த்துவேன்

**Lord I Lift Your Name On High**
**Lord I Love To Sing Your Praises**
**I Am So Glad You Are In My Life**
**I Am So Glad You Came To Save Us**

**You Came From Heaven To Earth To Show The Way**
**From The Earth To The Cross My Debts To Pay**
**From The Cross To The Grave From The Grave To The Sky**
**Lord I Lift Your Name On High**

# 4. மாட்சிமை தொழுவோம் அவர் மாட்சிமை

மாட்சிமை தொழுவோம் அவர் மாட்சிமை
துதி மகிமை வல்லமையாம் இயேசுவுக்கே...
மாட்சிமை ராஜ்யம் அதிகாரம்
பாய்கின்றதே தம் மக்கட்கே கீதத்தோடே

இயேசு நாமம் மேலாகவே உயர்த்திடுவோம்
வாருங்கள் உயர்த்திடுங்கள் இயேசு ராஜனை
மாட்சிமை! தோழுவோம் அவர் மாட்சிமை
மரித்தார் அவர் மகிமை நிறை இரஜா இன்றே.
உயிர்த்தார் அவர் மகிமை நிறை
இராஜா இன்றே
ஜெயித்தார் அவர் மகிமை நிறை
இராஜா இன்றே..

**MAJESTY, WORSHIP HIS MAJESTY**
**UNTO JESUS BE ALL GLORY POWER AND PRAISE**
**MAJESTY, KINGDOM AUTHORITY**
**FLOWS FROM HIS THRONE**
**UNTO HIS OWN HIS ANTHEM RAISE**

**SO EXALT, LIFT UP ON HIGH**
**THE NAME OF JESUS**
**MAGNIFY, COME GLORIFY**
**CHRIST JESUS THE KING**
**MAJESTY, WORSHIP HIS MAJESTY**
**JESUS WHO DIED NOW GLORIFIED**
**KING OF ALL KINGS**

# 5. ஒப்பிட முடியாத தெய்வமே

ஒப்பிட முடியாத தெய்வமே
உயர்ந்த அடைக்கலமே - 2
நீரே என் தெய்வம்
நீரே என் சொந்தம்
நீரே என் பந்தம்
நீரே என் எல்லாம் - ஒப்பிட

உம்மைப் போல் வேறே தெய்வம் இல்லை
உயிரோடு எழுந்தவரே - 2 - நீரே

என் மேலே உம் பரிதாபங்கள்
என்னை காத்திடுதே - 2 - நீரே

மனம் மாற நீர் ஒரு மனுஷனல்ல
தேவனாய் இருக்கின்றீரே - 2 - நீரே

நித்திய விவாகத்திற்கென்று
நியமித்துக் கொண்டவரே - 2 - நீரே

அரசாள என்னை அழைத்தவரே
அன்பால் இழுத்தவரே - 2 - நீரே

## 6. உயிரோடு எழுந்தவரே

உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம் -2
அல்லேலுயா ஓசன்னா -3

மரணத்தை ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம் -2

# 7. கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்

கீதம் கீதம் ஜெயஜெய கீதம்
கைகொட்டி பாடிடுவோம்
இயேசுராஜன் உயர்த்தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம்-ஆ-ஆ

பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் -
அங்கு போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன்-ஆ-ஆ

வேண்டாம் (2) அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுவோம்
தாம் கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு-ஆ-ஆ

அன்னா காய்பா ஆசாரியர் சங்கம்
அதிரடி கொள்ளுகின்றார்
இன்னா பூத கணங்கள் இடி ஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார்-ஆ-ஆ

வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம்
வருகிறார் ஜெயவீரன்
நம் மேளவாத்தியம் கைமணிப் பூரிகை
எடுத்து முழக்கிடுவோம்

## 8. எனக்காய் ஜீவன் விட்டவரே

எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்திடுவாரே

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயங்கிட்டாலும்
மயங்கிடாமல் முன் செல்லவே

புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார்

மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐஸ்வரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும்

## 9. இயேசுவே வழி சத்தியம் ஜீவன்

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்தியம் தேவன்
இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்தியம் தேவன்

புது வாழ்வு எனக்கு தந்தார்
சமாதானம் நிறைவாய் அளித்தார்
பாவங்கள் யாவும் மன்னித்தார்
சாபங்கள் யாவும் தொலைத்தார்
கல்வாரி மீதில் எனக்காய்
தம் உதிரம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தார்
உன்னதத்தில் அமர்ந்தார்

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்தியம் தேவன்
இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்தியம் தேவன்

நல் மேய்பனாக காத்தார்
என்னை தமயனாக கொண்டார்
என் நண்பனாக வந்தார்
என் தலைவனாக நின்றார்
மேகங்கள் மீதில் ஓர் நாள்
மணவாளனாக வருவார்
என்னை அணைத்துக்கொள்வார்
வானில் கொண்டுசெல்வார்

## 10. உயிரோடு எழுந்த இயேசுவே நான் வாழுவேன்

உயிரோடு எழுந்த இயேசுவே நான் வாழுவேன்
அல்லேலூயா (4)
உயிரோடு எழுந்த இயேசுவே நான் வாழுவேன்
நீர் ஒருவரே ஆண்டவர் நீர் ஒருவரே இரட்சகர்

என்னை தூக்கி தூக்கி
எடுத்தீரே நீர் சர்வ வல்லவரே
என்னை தூக்கி தூக்கி எடுத்தீரே
நீர் சமாதான காரணரே - 2

1. மரித்துபோன அந்த லாசரை
அன்று தேடியே இயேசு வந்தீரே
உங்க வாயின் வார்த்தையால
அன்று ஜீவன் வந்தது
அல்லேலூயா (4)

2. சிலுவையின் அந்த நாளிலே
இயேசு நீரே மரித்துபோனீரே
ஆனால் உயிரோடு எழுந்தீரே
அந்த எதிரியை ஜெயித்தீரே
அல்லேலூயா (4)

## 11. உயிர்தெழுந்த நம் இயேசு மரனத்தை

உயிர்தெழுந்த நம் இயேசு
மரனத்தை ஜெய்த்தெழுந்தார்
இன்றும் உயிரோடு இருக்கிறார்
அவர் என்றென்றும் நடத்துவார் -2

அல்லேலுயா பாடுவோம்
ஆர்பரித்து போற்றுவோம் - 2
உயிரோடு எழுந்த இயேசுவை
என்றென்றும் ஆராதிப்போம்-2

## 12. அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்

அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்
இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை
இன்பமாய் மாற்றும் இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடனே சங்கீதம் பாடுங்கள்

என்னென்ன துன்பங்கள் நம்மில் வந்த போதும்
தீர்த்த இயேசு அற்புதர்
எத்தனை தொல்லைகள் நம்மை சூழ்ந்த போதும்
காத்த இயேசு அற்புதர்
உலகத்தில் இருப்போரிலும் எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரைத் தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதரே

அலைகடல் மேலே நடந்தவர் எங்கள்
இயேசு அற்புதர்
அகோர காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர்
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளிலே
ஆயினும் மூன்றாம் நாள் உயிருடன் எழுந்த
இயேசு அற்புதரே

## 13. கூடுமே எல்லாம் கூடுமே

கூடுமே எல்லாம் கூடுமே
உம்மாலே எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லை உம்மால்
கூடாதது ஒன்றுமில்லை

கடல்மீது நடந்தீரையா
கடும்புயல் அடக்கினீரே
சாத்தானை ஒடுக்கினீரே
சர்வ வல்லவரே

செங்கடல் உம்மைக்
கண்டு ஓட்டம் பிடித்தது ஏன்
யோர்தான் உம்மைக் கண்டு
பின்னோக்கிச் சென்றது ஏன்

மரித்து உயிர்த்தீரையா
மரணத்தை ஜெயித்தீரையா
மறுபடி வருவீரையா
உருமாற்றம் தருவீரையா

உம் நாமம் சொன்னால்
போதும் பேய்கள் ஓடதையா
உம் பெயரால் கைகள் நீட்டினால்
நோய்கள் மறையுதையா

# 14. சர்வ வல்லவர் என் சொந்தமானார்

சர்வ வல்லவர் என் சொந்தமானார் (எஜமானன்)
சாவை வென்றவர் என் ஜீவனானார் (மணவாளன்)

ஆ... இது அதிசயம் தானே
ஓ... இது உண்மைதானே

கண்டு கொண்டேன் ஒரு புதையல்
பெற்றுக் கொண்டேன் ஒரு பொக்கிஷம்
இயேசுதான் என் இரட்சகர்
இயேசுதான் என் ராஜா

சந்தோஷமும் சமாதானமும்
என் உள்ளத்தில் பொங்குதம்மா
பாவமெல்லாம் போக்கிவிட்டார்
பயங்களெல்லாம் நீக்கிவிட்டார்

பரலோகத்தில் எனது பெயர்
எழுதிவிட்டார் என் இயேசு
என் வாழ்வின் நோக்கமெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வது தான்

ஊரெல்லாம் சொல்லிடுவேன்
உலகமெங்கும் பறைசாற்றுவேன்
ஜீவிக்கின்றார் என் இயேசு
சீக்கிரமாய் வந்திடுவார்

# 15. உயிரோடு எழுந்தவர் நம் தேவனே

உயிரோடு எழுந்தவர் நம் தேவனே
பாதாளம் ஜெயித்தவர் நம் இயேசுவே
ஜெயித்தார் இயேசு ஜெயித்தார் - 2
உயிர்த்தார் உயிரோடெழுந்தார் - 2

கல்லரை திறந்திட காவலர் நடுங்கிட
சாத்தானை ஜெயித்தவர் உயிருடன் எழுந்தாரே - 2

வல்லமை உடையவர்
சாபத்தை முறித்திட
நோய்களை தீர்திட
வீரமாய் எழுந்தாரே - 2

புது பெலன் அடைந்திட
சாட்சியாய் மாறிட
அபிஷேகம் செய்பவர்
மகிமையாய் எழுந்தாரே - 2

## 16. நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை

நீர் நல்லவர் என்பதில் சந்தேகமில்லை
பெரியவர் என்பதில் மாற்றமேமில்லை
உயர்ந்தவர் என்பதிலும் மாற்றமில்லை

கல்லறை திறந்தது உண்மைதான்
உயிரோடு எழுந்தது உண்மைதான்
பரலோகம் சென்றது உண்மைதான்
மீண்டும் வருவது உண்மைதான்
உண்மைதானே உண்மைதானே -2

1. எனக்காக சிலுவையில் மரித்தது உண்மை
   காலாலே சாத்தானை மிதித்தது உண்மை
   இரத்தத்தால் என்னை மீட்டது உண்மை
   இரட்சிப்பை எனக்கு கொடுத்தது உண்மை
   உண்மைதானே உண்மைதானே

2. ஆதியில் வார்த்தையாய் இருந்தவர் நீரே
   மாம்சத்தில் உலகில் வந்தவர் நீரே
   தேசங்கள் தேடிடும் பிரபலமும் நீரே
   ராஜாக்கள் நடுங்கிடும் ராஜனும் நீரே
   ஈடற்றவரே இணையற்றவரே

# 17. இரட்சண்யம் மகிமை துதிகனம்

இரட்சண்யம் மகிமை துதிகனம் வல்லமை
இயேசுவுக்கு சொந்தமல்லவா
ஆவியின் வல்லமை கிருபை மேல் கிருபை
தருகின்ற தேவனல்லவா

நான் பாடி ஸ்தோத்தரிப்பேன்
சங்கீர்த்தனம் பண்ணிடுவேன்
உம்மில் என்றும் மகிழ்ந்திடுவேன்

சாரோனின் ரோஜா நீரே சீயோனில் பெரியவரே
சாத்தானை ஜெயிக்க சத்துவம் அளிப்பீர்
பாடுவேன் அல்லேலூயா

காருண்யம் உள்ளவரே கரம் பற்றி நடத்திடுமே
கண்மணி போல காத்திட்டதாலே
பாடுவேன் அல்லேலூயா

சாலேமின் ராஜா நீரே சமாதான காரணரே
ஷாலோம் என்றாலே சமாதானம் தானே
பாடுவேன் அல்லேலூயா

மரணத்தை வென்றவரே மறைவிடமானவரே
வசனத்தை அனுப்பி குணமாக்குவீரே
பாடுவேன் அல்லேலூயா

# 18. மரணமே உன் கூர் எங்கே?

மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?
மரணத்தை ஜெயித்த மன்னவன் இயேசு
எனக்குள் வந்துவிட்டார்
சாவை அழித்து அழியா வாழ்வை
எனக்குத் தந்துவிட்டார்

சாவுக்கு அதிபதி சாத்தானை - இயேசு
சாவாலே வென்றுவிட்டார்
மரண பயத்தினால் வாடும் மனிதரை
விடுவித்து மீட்டுக் கொண்டார்

பயமில்லையே மரண பயமில்லையே
ஜெயம் எடுத்தார் இயேசு ஜெயம் எடுத்தார்
அழிவுக்குரிய இவ்வுடல் ஒருநாள்
அழியாமை அணிந்து கொள்ளும்
சாவுக்குரிய இவ்வுடல் ஒரு நாள்
சாகாமை அணிந்து கொள்ளும்

இறந்தோர் மேலும் வாழ்வோர் மேலும்
ஆளுகை செய்திடவே
இயேசு மரித்து உயிர்த்து எழுந்தார்
இன்றைக்கும் ஜீவிக்கிறார்

கட்டளை பிறக்க தூதன் குரல் ஒலிக்க
கர்த்தர் இயேசு வந்திடுவார்
கிறிஸ்துவுக்குள் வாழ்வோர்
கிறிஸ்துவுக்குள் மரித்தோர்
எதிர் கொண்ட சென்றிடுவோம்

# 19. வழி சொன்னவர் வழியுமானவர்

வழி சொன்னவர் வழியுமானவர்
வழி சத்தியம் ஜீவனுமாய் வந்தவர்
வார்த்தை என்றவர் வார்த்தையானவர்
உலகினிலே ஒளியாக உதித்தவர்
மண்ணோர் போற்றும் மன்னாதி மன்னன்
விண்ணோர் போற்றும் தேவாதி தேவன்
சான்றோர் போற்றும் தூயாதி தூயன்
ராஜாதி ராஜன் இவர் - இயேசு

இயேசுவே தெய்வம் ஒரே ஒரு தெய்வம்
இயேசுவே தேவன் மெய்யான தேவன்
இயேசுவே தெய்வம் தேடி வந்த தெய்வம்
இயேசுவே தேவன் மீட்க வந்த தேவன்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா

இயேசுவே இரட்சகர் உயிர் ஈந்த இரட்சகர்
இயேசுவே ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஆண்டவர்
இயேசுவே கர்த்தனாம் கர்த்தாதி கர்த்தனாம்
இயேசுவே ராஜனாம் ராஜாதி ராஜனாம்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா

# 20. உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசு
என் சொந்தமானாரே

கல்லறைத் திறந்திடவே கடும் சேவகர் பயந்திடவே வல்லவர்
இயேசு உயிர்த்தெழுந்தாரே வல்லப் பிதாவின் செயலிதுவே

மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே

எம்மாவூர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம்மனக் கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே

மரணமுன் கூர் எங்கே?
பாதாள முன் ஜெயமெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம்

## 21. பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே

**பாவங்கள் போக்கவே சாபங்கள் நீக்கவே**
**பூலோகம் வந்தாரைய்யா**
**மனிதனை மீட்கவே பரலோகம் திறக்கவே**
**சிலுவையை சுமந்தாரைய்யா**
**கண்ணீரை துடைத்தாரைய்யா**
**சந்தோஷம் தந்தாரைய்யா**
**எந்தன் இயேசுவே - 4**

**தங்கத்தை கேட்கவில்லை**
**வைரத்தை கேட்கவில்லை**
**உள்ளத்தை கேட்டாரைய்யா**
**ஆஸ்தியை கேட்கவில்லை**
**அந்தஸ்தை கேட்கவில்லை**
**உள்ளத்தை கேட்டாரைய்யா**

**நான் தேடி போகவில்ல**
**என்னை தேடி வந்தாரைய்யா**
**எந்தன் இயேசுவே - 4**
**தாய் உன்னை மறந்தாலும்**
**தந்தை உன்னை மறந்தாலும்**
**அவர் உன்னை மறக்கமாட்டார்**
**நண்பன் உன்னை மறந்தாலும் உற்றார் உன்னை மறந்தாலும்**
**அவர் உன்னை மறக்கமாட்டார்**

**கரம் பிடித்து நடத்திடுவார்**
**கன்மலை மேல் நிறுத்திடுவார்**
**எந்தன் இயேசுவே - 4**

## 22. சப்தமாய் பாடி சத்துருவை

சப்தமாய் பாடி சத்துருவை
சங்கிலியால் கட்டுவோம்
நித்தம் நித்தம் கர்த்தர் நாமம்
பாடி உயர்த்திடுவோம் - 2

இராஜா இயேசு ஜீவிக்கின்றார்
இரத்தம் சிந்தி ஜெயம் தந்தார்

1. புதுப்பாடல் பாடி, மகிழ்வோம் புனிதர்கள் சபையிலே 2
துதிபலி எழும்பட்டும் ஜெயக்கொடி பறக்கட்டும் 2
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

2. உண்டாக்கினாரே நம்மை உள்ளம் மகிழட்டும் 2
ஆளுநர் அவர்தானே இதயம் துள்ளட்டும் 2
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

3. தமது ஜனத்தின்மேலயே பிரியம் வைக்கின்றவர் 2
வெற்றி தருகிறார் மேன்மைப்படுத்துவார் 2
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

4. கர்த்தரை உயர்த்தும் பாடல் வாயில் இருக்கட்டும் 2
வசனம் என்ற போர்வாள் கையிலே இருக்கட்டும் 2
எழுப்புதல் தேசத்தில் பொழுதுபோல் உதித்தது

## 23. நீர் என்னோடு இருக்கும்போது

நீர் என்னோடு இருக்கும்போது
எந்நாளும் வெற்றி வெற்றியே 2
தோல்வி எனக்கில்லையே நான்
தோற்றுபோவதில்லையே 2

1. மலைகளைத் தாண்டிடுவேன் - கடும்
பள்ளங்களைக் கடந்திடுவேன் - 2
சதிகளை முறியடிப்பேன்
சாத்தானை ஜெயித்திடுவென் - 2
ஹாலேலூயா 8 (நீா என்னோடு)

2. சிறைச்சாலைக் கதவுகளும் - என்
துதியினால் உடைந்திடுமே 2
அபிஷேகம் எனக்குள்ளே நான்
ஆடிப்பாடி மகிழ்ந்திடுவேன் - 2

3. மரணமே கூர் எங்கே
பாதாளமே ஜெயம் எங்கே2
கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவெனக்கு ஆதாயமே

# 24. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே - எனக்கென்ன
குறையுண்டு நீ சொல் மனமே (2)

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தார்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்
விண்ணுல குயர்ந்தோர்
உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுகபத்திர மருளும்

2. பாவமோ மரணமோ நரகமோ பேயோ
பயந்து நடுங்கிட ஜெயம் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்
சஞ்சலமினியேன் நெஞ்சமே மகிழ்வாய்

3. ஆசிசெய்திடுவார் அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்ச வழி சத்தியம் வாசல் உயிரெனும்

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்
பாவமன்னிப்பளிப்பார் பாக்கியங்கொடுப்பார்
பரம பதவியினுள் என்றனை எடுப்பார்

# 25. நான் ஆராதிக்கும் இயேசு என்றும் ஜீவிக்கிறாரே

நான் ஆராதிக்கும் இயேசு என்றும் ஜீவிக்கிறாரே
அவர் தேவனாயினும் என்னோடு பேசுகின்றாரே

அவர் சிந்தின இரத்தம் மீட்பை தந்தது
அவர் கொண்ட காயங்கள் சுக வாழ்வை தந்தது

அவர் என்னோடு இருந்தால் ஒரு சேனைக்குள் பாய்வேன்
அவர் என்னோடு இருந்தால் ஒரு மதிலை தாண்டுவேன்

உடைந்துபோன என் வாழ்வை சீரமைச்சாரே
அரணான பட்டணம்போல் மாற்றி விட்டாரே
என் சத்துருக்கள் பின்னிட்டு ஓடச் செய்தாரே
என் எல்லையெங்கிலும் சமாதானம் தந்தாரே
அவர் செய்த நன்மையை நான் சொல்லி துதிப்பேன்

இரட்சிப்பின் வஸ்திரத்த உடுத்துவித்தாரே
நீதியென்னும் மார்க்கவசம் எனக்கு தந்தாரே
கிருபைய தந்து என்ன உயர்த்தி வச்சாரே -என்
நாவின் மேலே அதிகாரம் வச்சாரே

உலர்ந்துபோன என் கோலை துளிர்க்கச் செய்தாரே
ஜீவனற்று என் வாழ்வில் ஜீவன் தந்தாரே
ஒரு சேனையைப்போல என்னை எழும்பச் செய்தாரே
என் தேசத்தை சுதந்தரிக்கும் பெலனைத் தந்தாரே

# 26. யூத ராஜ சிங்கம் உயிர்தெழுந்தார்

**யூத ராஜ சிங்கம் உயிர்தெழுந்தார்**
**உயிர்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்**

**வேதாளக் கணங்கள் ஓடிடவே**
**ஓடிடவே உருகி வாடிடவே**

**வானத்தின் சேனைகள்துதித்திடவே**
**துதித்திடவே பரனை துதித்திடவே**

**மரணத்தின் சங்கிலிகள்தெறிப்பட்டன**
**தெறிப்பட்டனநொடியில் முறிப்பட்டன**

**எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே - 2**
**பயத்தை என்றும் நீக்குதே**

**மாதர் தூதரைக் கண்டமகிழ்ந்தார்**
**அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார்**

**மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை**
**மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை**

# 27. யூதாவின் இராஜசிங்கம் நீரே

1. யூதாவின் இராஜசிங்கம் நீரே
அல்ஃபாவும் ஓமெகாவும் நீரே
வல்லமை கனம் ஞானம் மகிமையையும்
துதியையும் பெற்றுக்கொள்ள
பாத்திரர் நீரே -2

பாவமானீரே என்னை நீதியாக்கிட
சாபமானீரே எந்தன் சாபம் போக்கிட
காயமானீரே எந்தன் நோய்கள் தீர்த்திட
ஏழையானீரே எந்தன் ஏழ்மை நீக்கிட -2

2. நீர் என்றும் எந்தன் நல்ல மேய்ப்பர்
எந்நாளும் தாழ்ச்சி அடையேனே
அமர்ந்த தண்ணீர் பசும்புல்வெளியில்
என்னை மேய்த்து
நித்தம் காக்கும் நல்ல தேவனே -2

பகைவர் முன்பாக பந்தி ஆயத்தம் செய்தீர்
என் தலையை எண்ணெயால்
அபிஷேகமும் செய்தீர்
ஜீவ நாளெல்லாம் நன்மை கிருபை தொடருமே
நான் கர்த்தர் வீட்டினில் நீடித்து வாழ்வேனே -2

3. என் நாவு உந்தன் நீதியையும்
நாளெல்லாம் உந்தன் துதியையும்
ஓயாமல் போற்றிப்பாடும்
குறைவையெல்லாம் நீக்கிப்போடும்
கைவிடாத நல்ல தேவன் நீர் -2

உமது மகிமையின் ஐசுவரியத்தின்படி
என் குறைவுகளெல்லாம் நிறைவாக்கும் தேவனே
யெஹோவா யீரே நீர் எந்தன் எல் ஷடாய்
போதுமானவரிலும் மிகவும் அதிகமானவர் -2

## 28. அனைத்தையும் செய்து முடிக்கும்

அனைத்தையும் செய்து முடிக்கும்
ஆற்றல் உள்ளவரே
நீர் நினைத்தது ஒரு நாளும்
தடைபடாதையா

நீர் முடிவெடுத்தால்
யார்தான் மாற்ற முடியும்
எனக்கென முன்குறித்த எதையுமே
எப்படியும் நிறைவேற்றி முடித்திடுவீர்
உமக்கே ஆராதனை
உயிருள்ள நாளெல்லாம்

என்னைப் புடமிட்டால்
பொன்னாக துலங்கிடுவேன்
நான் போகும் பாதைகளை அறிந்தவரே
உந்தன் சொல்லை உணவு போலக்
காத்துக் கொண்டேன்

நான் எண்ணிமுடியா அதிசயம் செய்பவரே
காயப்படுத்தி கட்டுப்போடும் கர்த்தரே
என்னை அடித்தாலும்
அணைக்கின்ற அன்பரே

என் மீட்பரே உயிரோடு இருப்பவரே
இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பதை
என் கண்கள்தானே அந்நாளில் காணுமே
எப்போது வருவீரையா
என் உள்ளம் ஏங்குதையா